TAMIL NADU ... 21 JUL 197 MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1973 மார்ச் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினக்கள்.

New Taxes.

* 326 Q.—THIRU N. K. PALANISWAMI :
THIRU S. DURAISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have received any communication from the Centre suggesting the levy of new taxes in this State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 14-6-1972 இல்.

மத்திய நிதி அமைச்சர் அவர்கள் அனுப்பிய கடிதத்தில் கீழ்க்கண்ட ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன—

1. நிலவரிச் சலுகைகளை நீக்கிவிடுதல்.

2. நிலவரிக்கு மேல்வரி விதித்தல்.

3. பாசனம்பெறும் நிலத்திற்கு மேல்வரி விதித்தல்.

4. மின்சாரம் பயன்படுத்துவோர் செலுத்தும் மின் கட்டணங்களுக்கு மேல்வரி விதித்தல்.

5. நகராட்சி சொத்துவரி மீது மேல்வரி விதித்தல்.

[1973 மார்ச் 1?

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கெனவே நீர்ப்பாசன வரிகள், மின்சாரக் கட்டணம், விவசாய வருமான வரி போன்றவை அதிகப்படியாகப் போடப்பட்டுவிட்டன. இதற்குமேல் போடவும் முடியாது. ஆகவே, கார்ப்பரேட் டாக்ஸ் போன்றவற்றில் அதிகப் பங்கு கேட்டுப் பெறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைத்தான் நாம் கேட்கிறோம். நிதி நிலை அறிக்கையில் அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது தமிழக அரசு எடுக்கின்ற முடிவுகளுக்கு ஏற்ப எல்லாக் கட்சிகளும் ஒத்துழைத்தால் நாம் அழுத்தமாக இவைகளை வலியுறுத்த இயலும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மத்தியிலே நியமிக்கப்பட்ட ராஜ் கமிட்டி ரிப்போர்டின் அடிப்படையில் இப்பொழுது விவசாய வருமான வரியும் இன்கம்-டாக்ஸ் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்று சட்டம் வரப்போவதாகச் சொல்கிறார்களே, அது சம்பந்தமாக மாநில அரசோடு மத்திய அரசு ஏதாவது தொடர்பு கொண்டுள்ளதா ? அதற்கு மாநில அரசு ஏதாவது பதில் அனுப்பியதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றிக் கருத்து அறிவிக்கப்பட்டபோது, நம்முடைய மாநில அரசின் சார்பாக அதற்கு எதிர்க்கருத்து தெரிவிக்கப்பட்டது. அப்படியே அவர்கள் விவசாய வருமானத்தையும் கணக்கில்கொண்டு வருமான வரி விதிப்பதாக இருந்தாலும், அதன் மூலமாகக் கிடைக்கின்ற மேல் வரித் தொகை நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டும் என்ற கருத்தும் இப்பொழுது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : அதிகமான வரிகள் விதிக்கவேண்டும் என்று கூறுகிற மத்திய அரசை நடத்துகிற கட்சியைச் சார்ந்த தமிழகத்தில் உள்ளவர்கள் இப்படி வரிகளை நீக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்வதைப்பற்றி மத்திய அரசுக்கு நம்முடைய அரசு தெரிவித்திருக்கிறதா ? விவசாயிகளுக்கும் மற்ற ஏழை

1973 மார்ச் 12]

மக்களுக்கும் உதவும் வகையில், இம்மாதிரியான வரிகளை அதிகப் படுத்தாமல் இருப்பதற்குத் தங்களுடைய கருத்துக்களை மத்திய அரசுக்கு நம்முடைய அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுவதைப்போல மத்திய அரசைச் சார்ந்த கட்சியினர் கிளப்பிவிடுகிறார்கள் என்பதற்கு இதுதான் எடுத்துக்காட்டு.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த விவசாய வருமான வரி சம்பந்தமாக முழுப் பொறுப்பும் மாநில அரசுக்கு இருக்கிறது. அப்படித்தான் அரசியலமைப்பில் இருக்கிறது. ஆதலால், அது சம்பந்தமாக மேலும் நமது அரசு என்ன நடவடிக்கை மேற் கொள்ளத் தீர்மானித்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது விவசாய வருமான வரி விதிப்பதாக அவர்கள் இன்றைக்கு இந்தச் சட்டத் தைக் கொண்டு வருவதாக இல்லை. அவர்களுடைய முடிவு அப்படிப்பட்டதல்ல. விவசாய வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த ஸ்லாப் ஸிஸ்டத்தில் வருமானத்தை அதிகமாக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அதிக மான ஸ்லாப் ஸிஸ்டத்தில் விவசாய வருமானத்தைக் கணக்கிடும் போது, எவ்வளவு அதிகம் ஆகிறதோ அந்த இடைவெளித் தொகையை நம்முடைய மாநில அரசுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று நான் அறிவித்திருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி: வரி போடுவதற்கு யோசனை கூறும் மத்திய அரசு, இருக்கின்ற கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவர ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறதா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது மாநில அரசு செய்யவேண்டிய காரியம் அல்ல; மத்திய அரசு செய்ய வேண்டிய காரியம். மத்திய அரசுக்கு அந்த யோசனையைப் பாராளு மன்றத்தில்தான் சொல்ல வேண்டும்.

திரு. ஆ. பரந்தாமன்: ராஜ் கமிட்டியின் அறிக்கை ஒத்து வராது என்று பல்வேறு மாநிலங்கள் தெரிவித்திருப்பதால் நமது மாநில அரசு அதை முழுமையாகப் பரிசீலிக்காமல் விட்டுவிடுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எதையும் பரிசீலிக்காமல் விட்டுவிடுவது நல்லதல்ல. எதையும் பரிசீலிப்பதுதான் கடமை.

திரு. என். கே. பழனிசாமி : ஐந்தாண்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு நமது அரசு எவ்வளவு பணம் தரப்போவதாக ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் ? அந்தப் பணத்தை எவ்வாறு திரட்டப்போகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது இந்த ஆண்டுத் திட்டத்தைப்பற்றித்தான் நாம் பேசி முடிவு எடுத்திருக்கிறோம். வரப்போகிற ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தொகையைப்பற்றி எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether a deficit budget is more favourable for States than surplus budget?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டு முனையிலிருந்தும் வாதாடலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : மத்திய சர்க்கார் தற்போது 292 கோடி ரூபாய்க்கு வரி விதித்திருப்பதால் ஏழை நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதை இந்த அரசு அறியுமா ? பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமை மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்து விளம்பியிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவைகளையெல்லாம் நாடாளுமன்றத்திற்கு இந்த மாநிலத்தின் சார்பாகச் சென்றிருக்கும் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 14-6-1972 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில் அந்தப் பரிந்துரையில் கூறியிருக்கிற ஏதாவது மேல் வரியைக் கூட்டுவதற்கு இந்த அரசு உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எதையும் செய்யவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

1973 மார்ச் 12]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசு சொன்ன புதிய வரி போடும் ஆலோசனையை நாம் நிறைவேற்றித் தான் தீர வேண்டுமா ? நிறைவேற்றுவிட்டால் மத்திய அரசு என்ன செய்யும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிறைவேற்றித்தான் தீர வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் கிடையாது. ஆனால், திட்டத்திற்காகத் தொகை ஒதுக்கவேண்டும் என்று சொல்லும் போது, அவர்கள் நம்முடைய ரிஸோர்ஸஸ் என்ன என்று கேட் பார்கள். ரிஸோர்ஸஸ் குறைவாக இருக்கும்போது, " நாங்கள் சொன்னதை நீங்கள் கேட்கவில்லை " என்று வாதிடுவதற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடும். ரிஸோர்ஸஸ்ஸை அவர்கள் சொன்ன வழியின் மூலமாகவும் வேறு வழியிலும் மாநில அரசு பெருக்கிக்கொள்ளலாம்.

பரிசுச்சீட்டுகளில் திருத்தம் செய்து பரிசு கோரியவர்கள்

***327 வினு.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

1971, 1972 ஆகிய இரு ஆண்டுகளிலும் பரிசுச் சீட்டுகளைத் திருத்தி பரிசு பெற முயன்றதாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பரிசுச் சீட்டில் மோசடி செய்து பரிசுத் தொகை கோரியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு மொத்தம் 26 வழக்குகள் அனுப்பப்பட்டன.

1971-ல்	22
1972-ல் (30—6—1972 வரையில்)	4
மொத்தம்	26